செ.வெ.எண்: 58 நாள்:26.10.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊழல் விழிப்புணர்வு வாரம் 26.10.2021 முதல் 01.11.2021 வரை கடைபிடிப்பதை தொடர்ந்து நேர்மை உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள் இன்று 26.10.2021 எடுத்துக்கொண்டனர்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஊழல் விழிப்புணர்வு வாரம் 26.10.2021 முதல் 01.11.2021 வரை கடைபிடிப்பதை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேர்மை உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள் இன்று 26.10.2021 எடுத்துக்கொண்டனர்.

“நமது நாட்டின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு ஊழல் முக்கியத் தடைகளில் ஒன்றாக இருப்பதாக நான் நம்புகிறேன். அரசு, குடிமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் இவைகள் அனைத்தும் ஊழலை ஒழிக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனக் கருதுகிறேன்.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் விழிப்புணர்வோடும், நேர்மையுடனும், கண்ணியத்துடனும் ஊழலை ஒழிப்பதில் உயர்ந்த நோக்குடன் உறுதுணையாக விளங்க வேண்டும் என்பதை நான் நன்கறிவேன்.

எனவே, அனைத்து செயல்களிலும் நேர்மையையும், சட்ட விதிகளையும் பின்பற்றுவேன் என்றும், லஞ்சம் வாங்கவோ அல்லது கொடுக்கவோ மாட்டேன் என்றும், அனைத்து செயல்களிலும் வெளிப்படைத் தன்மையுடனும், நேர்மையுடனும் நடந்து கொள்வேன் என்றும், பொதுமக்களின் நலனுக்காக பணியாற்றுவேன் என்றும், தனிப்பட்ட நடத்தையில் நேர்மையை வெளிப்படுத்துவதில் ஒரு முன்னுதாரணமாக செயல்படுவேன் என்றும், ஊழல் தொடர்பான தகவல்களை உரிய அதிகாரி அமைப்பிற்கு தெரியப்படுத்துவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.‘கிலா, சமூக பாதுகாப்பு துணை ஆட்சியர் திரு.கு.ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.குணசேகரன், மாவட்ட துணை ஆட்சியர் (பயிற்சி) எம்.சௌமியா மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.